# தடம் புரண்டு செல்லும் இலங்கையின் இடதுசாரிகள்: ஒரு வரலாற்று நோக்கு
# Sri Lankan Leftists Moving off the Track - An Analysis On Historical Perspective

**ஆ.யோகராசா**
விரிவுரையாளர்
(அரசியல் விஞ்ஞானப்பிரிவு)
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

உலகின் எந்தவொரு நாட்டிலும் உருவாகி வளர்ந்து வந்த அரசியல் இயக்கங்களை எடுத்து நோக்கின் அவை தோன்றுவதற்கும், வளர்ச்சி பெறுவதற்கும் அந்நாட்டின் வரலாற்று வளர்ச்சியும் தேவையும் அடிப்படைக்காரணமாகின்றது. இவ்வரலாற்று வளர்ச்சியானது ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதார, அரசியல், சமூக, கலாசார ஒழுங்கமைப்பின் புறநிலை அம்சங்களுடன் இணைந்தவையாகவே இருந்து வந்துள்ளது. இப்பொதுநியதிக்குட்பட்டதாகவே இலங்கையிலும் அரசியல் இயக்கங்கள் காலத்துக்குக் காலம் தோன்றி வளர்ந்து வந்துள்ளன. அந்த வகையில் கடந்த நூற்றாண்டின் முப்பதுகளிலே தோற்றம் பெற்று வளர்ந்து வந்த இடதுசாரி இயக்கத்தை நோக்குதல் இக்கட்டுரையின் தொனிப்பொருளாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்காலத்திலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பிரித்தானிய காலனித்துவவாதிகள் கிழக்கில் தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்திக் கொள்வதில் முழுக்கவனத்தையும் செலுத்தி நின்றனர். இந்து சமுத்திரத்தில் முக்கிய தீவாகத் திகழும் இலங்கையை கைப்பற்றிக்கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டனர். 1505இல் இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் படிப்படியாக தமது ஆதிக்கத்தை வலுப்படுத்தி வந்தனர். அதன் பின் அவர்களிடமிருந்து ஒல்லாந்தர் ஆதிக்கத்தைப் பறித்துக்கொண்டனர். இவ்விரு பகுதியினரும் முழு இலங்கையையும் ஒரு போதும் கைப்பற்றிக் கொள்ளமுடியவில்லை. எனினும் பிரித்தானியர் ஒல்லாந்தரிடமிருந்து அதிகாரத்தைப் பறித்துக் கொண்டது மட்டுமன்றி இறுதியாக 1815இல் கண்டி இராச்சியத்தைக் கடும் எதிர்ப்பின் மத்தியில் கைப்பற்றியதுடன் முழு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

இலங்கை, அந்நியராட்சி ஏற்படுவதற்கு முன்னர் ஒரு தன்னிறைவுப் பொருளாதாரத்தை உடைய நாடாகவே இருந்து வந்தது. ஒரு விவசாய நாடாகவும் அதன் பிரதான உற்பத்தி நெல்லாகவும் விளங்கியது. இதனை அந்நியர்கள் குறிப்பாக பிரித்தானியர் சுதேச பொருளாதாரத்தை அழித்து விடுவதில் மிகவும் முனைப்புடன் செயற்பட்டனர். அவர்கள்

இதனை அடைவதில் இரண்டு வழிமுறைகளைப்பின்பற்றித் திட்டமிட்டுச் செயற்பட்டனர். ஒன்று இலங்கையின் தன்னிறைவுப் பொருளாதாரமாக விளங்கிய விவசாயத்தை அழித்தொழித்து உணவுக்கும் ஏனைய நுகர்வுப் பொருட்களுக்கும் தங்களையே எதிர்பார்த்து நிற்கச் செய்யும் நீண்டகால நோக்கினை நடைமுறைப்படுத்திக்கொள்வது. இரண்டாவதாக இலங்கையைக் கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட ஒரு நாடாக மாற்ற முற்படாமையைக் குறிப்பிடலாம். அதேவேளை கொள்ளைத்தனமான சுரண்டலுக்கேற்ற புதிய வகைப் பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு காலனித்துவ நாடாக்குவதில் முழுக் கவனத்தையும் செலுத்தி நின்றனர். இந்த வகையிலேயே இலங்கையின் கோப்பி, தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற உற்பத்திகளுக்கு ஊக்கமளித்தனர். இதனால் இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரமாக தேயிலை, இறப்பர், தெங்குப்பொருட்கள் முன்னிலைக்கு வந்தன. இவற்றுள் தேயிலை உற்பத்தியும் வர்த்தகமும் பிரித்தானிய முதலாளிகளின் கையிலேயே தங்கியிருந்தது. அது மட்டுமல்லாது இந்தப் பெருந் தோட்டத்தொழில் துறைக்கு இந்தியாவிலிருந்து தமிழ்த் தொழிலாளர்கள் கூலியாகக் கொண்டு வரப்பட்டனர். குறைந்த கூலி, கூடியவேலை, இலகுவாக அடக்கி வைத்திருத்தல் போன்ற வற்றிற்காக ஏமாற்றி அழைக்கப்பட்ட இந்திய வம்சாவழித் தோட்டத்தொழிலாளர்களே இவ் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வைத்துக் கசக்கிப்பிழியப்பட்டனர்.

பிரித்தானிய காலனித்துவவாதிகள் உருவாக்கிய முதலாளித்துவச்சுரண்டல் பொருளாதார அமைப்புக்கேற்ற விதமான அரசாங்க நிர்வாக அமைப்பு முறையினையும் கட்டமைத்து வழிநடத்தி வந்தனர். இதனால் இலங்கையின் அனைத்து மக்களும் காலனி யாதிக்கத்தின் கீழ் தமது தனித்துவமிக்க பொருளாதார, அரசியல், சமூக கலாசாரத்தின் சுயத்தினை இழந்தவர்களாயினர். இருப்பினும் காலப்போக்கில் அவர்கள் மத்தியில் அந்நிய ஆட்சியாளர்களுக்கெதிரான கசப்புணர்வுகளும் தோன்றி வெளிப்பாடடையத்தொடங்கின.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் காலனித்துவத்திற்கெதிரான உணர்வுகள் பல மட்டங்களிலும் இருந்து பல்வேறு வடிவங்களில் வெளிப்படத் தொடங்கின. அந்நிய மதக் கலாசாரத்துக்கெதிரான கருத்துக்கள் வலிமையடைந்தன. இதனடிப்படையிலேயே மத எதிர்ப்பு இயக்கங்களும் கிளர்ச்சிகளும் உருவாகின. ஏறத்தாழ இறுதிக்கால கட்டத்திலேயே இலங்கைக்குச் சுதந்திரம் பெற்றுக் கொள்ளும் நோக்குடைய **"இளம் இலங்கையர் கழகம்"** தோற்றுவிக்கப்பட்டது. இந்நிலையில் 1915 இல் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே ஏற்பட்ட கலவரம், பிரித்தானியருக்கு எழுச்சியடைந்து வந்த தேசியத்துவத்தை நசுக்குவதற்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித்தந்தது. தனது கொடிய அடக்கு முறையை இராணுவச்சட்டத்தைப் பயன்படுத்தி கட்டவிழ்த்துவிட்ட அந்நியராட்சி சிங்களவர்களையும் அவர்களது தலைவர்களையும் பயமுறுத்தி அடிபணியச்செய்வதற்கு சந்தர்ப்பமாக்கிக்கொண்டது.

மேற்படி நிகழ்வைத்தொடர்ந்துவந்த ஆண்டுகளில் அரசியல் சீர்திருத்தத்தைக் கோரும் போக்கு வலிமையடையத் தொடங்கியது. அதன் விளைவாகவே 1919 இல் **"இலங்கைத் தேசிய காங்கிரஸ்"** என்னும் ஸ்தாபனம் உருவாக்கம் பெற்றது. பல்வேறு நிலைகளிலிருந்து அரசியல் சீர்திருத்தத்தை தீவிரமான நிலையிலும் பணிவான மிதவாதப் போக்கிலும் கோரிநின்ற இரு பகுதியினரை உள்ளடக்கியதாகவே இத்தேசிய காங்கிரஸ் விளங்கியது. இதன் முதலாவது தலைவராக முற்போக்கு சீர்திருத்த எண்ணம் கொண்டவரான **சேர்.பொன். அருணாச்சலம்** தெரிவு செய்யபபட்டார். எனினும் அவர் தனது காலத்தில் மதிவாதத் தலைவர்கள் பலரின் கருத்துக்களோடு முரண்பாடு கொண்டவராகக் காணப்பட்டார். குறிப்பாக மேல்மாகாணத்தில் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக சிங்களத்தலைவர்கள் கொண்ட கருத்து வேறுபாட்டினால் 1921 இல் தனது தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து கொண்டு **"தமிழ் மகாசபை"** என்றதொரு இனரீதியான அமைப்பினை உருவாக்கினார். மேற்படி இந்நிகழ்வானது இலங்கையில் சிங்களவர் தமிழர்களுக்கிடையிலான நீண்ட இனமுரண்பாட்டின் ஆரம்பம் மட்டுமன்றி முதலாவது ஒப்பந்த முறிவு எனக் குறித்துக் கொள்வதாகவும் அமைந்தது.

இலங்கை தேசிய காங்கிரஸில் பலதரப்பட்டவர்கள் இணைந்திருந்தபோதிலும் உயர் வர்க்க மிதவாதிகளே அதில் ஆதிக்கம் செலுத்துபவர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் தமது வர்க்க இயல்புகளுக்கேற்ற கொள்கைகளையே கொண்டிருந்தனர். அவர்கள் இந்திய தேசிய முதலாளித்துவ சக்தி போன்றவர்கள் அல்லர். இந்திய தேசிய முதலாளித்துவ சக்திகளுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வும் தேசிய நலன்களில் அதிக அக்கறையும் இருந்தது. ஆனால் இலங்கையில் வளர்ந்து வந்த சுதேசிய முதலாளித்துவமும் உயர் பிரபுத்துவ வர்க்கமும் பிரித்தானியர்களை விரோதித்துக்கொள்ளாமலேயே வளர்ந்து வந்தவர்கள். அந்நியரோடு போட்டி போட்டுக்கொள்ளாத துறைகளிலேயே இவர்களது வர்க்க வளர்ச்சி இருந்து வந்தது. இதனால் இவர்கள் பிரித்தானிய ஆட்சியினருடன் இணங்கிப் போகும் போக்கினையே எப்பொழுதும் முனைப்புடையதாகக் கைக்கொண்டனர்.

**இலங்கையில் இடதுசாரிச் சிந்தனை**

உயர் மத்தியதர வர்க்கக் குடும்பங்களில் இருந்து வந்த மாணவர்கள் ஐரோப்பிய அமெரிக்க பல்கலைக்கழங்களில் உயர்கல்வி கற்க ஆரம்பித்த சூழலில் அவர்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு உருவாகியது. அன்றைய சர்வதேச சூழலையும் அதில் ஏற்பட்டுவந்த தீவிர அரசியல் மாற்றங்களையும் இவர்கள் உற்றுநோக்கத் தலைப்பட்டனர். உலகில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அலை தேசிய விடுதலைப் போராட்டங்களாக வேகம் பெற்று வந்தன. குறிப்பாக இந்திய தேசிய விடுதலை எழுச்சி, பெரும் புயலாக அக்காலத்தில் வீசியது. இங்கிலாந்திலும் ஏனைய மேற்கு நாடுகளிலும் கல்வி பயின்றுவந்த இந்திய மாணவர்கள் மிகவும் தீவிர செயற் பாட்டினைக் கொண்டிருந்தனர். இவை யாவும் இலங்கை மாணவர்களையும் உந்துதலுக்குள்ளாக்

கியது. இதனால் இவர்களது உலகக் கண்ணோட்டத்தில் புதிய வகைச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் தோன்ற ஆரம்பித்தன. குறிப்பாக பிரித்தானிய கம்யூனிசக் கட்சியின் கொள்கையும் நடைமுறைகளும் இந்திய, இலங்கை மாணவர்களின் அதிக அக்கறைக்குள்ளாகியது. இதனால் இம்மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மாக்சிசக் கருத்துக்களால் மிக விரைவாகக் கவரப்பட்டனர். அவர்களுள் கலாநிதி. எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹ, பிலிப் குணவர்த்தனா, கொல்வின் ஆர்.டி.சில்வா, லெஸ்லி குணவர்த்தனா, என்.எம்.பெரேரா போன்றவர்கள் தீவிர மாக்சிசக் கருத்துடையவர்காளவும் விஞ்ஞான சோஷலிசத்தின் மீது பற்றுக்கொண்டவர்களாகவும் உருவாகினர்.

**இடதுசாரிக்கட்சிகளின் தோற்றம்**

இலங்கையில் கட்சி முறை வரலாறானது, மேலைத்தேச பாராளுமன்ற ஜனநாயக அரசியல் கட்சிகளின் வரலாற்றுடன் ஒப்பிடும் போது அது குழந்தைப் பருவத்திலேயே உள்ள தெனலாம். டொனமூர் அரசியலமைப்பின் (1931) காலப்பகுதியிலே இலங்கைக்கட்சிகளின் தோற்றத்தை நாம் அவதானிக்க முடிகிறது. இந்தவகையில் இலங்கையில் இடதுசாரிக் கட்சிகளின் தோற்றத்தை ஆராய்வோர் 1920 களில் ஏ.இ.குணசிங்காவின் தலைமையின் கீழ் ஆரம்பித்த தொழிற்கட்சியுடன்தான் நோக்குவர்.

வெளிநாடுகளுக்கு உயர்கல்வி கற்கச்சென்று நாடுதிரும்பிய தீவிரவாத இளைஞர்களை உள்ளடக்கி 1935ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட **"லங்கா சமசமாஜக்கட்சியே"** (LSSP) இலங்கையின் முதலாவது ஒழுங்கமைக்கப்பட்ட இடதுசாரிக்கட்சி எனலாம். இத்தீவிரவாத துடிப்பான இளைஞர்களின் வழிகாட்டலின்படியே இலங்கைக்கு மாக்சிசம் அறிமுகமாயிற்று. எனினும் உலக அரங்கில் ஏற்பட்ட மாற்றங்களும் நிகழ்வுகளும் இக்கட்சியில் பிளவுகளை ஏற்படுத்தி பல இடதுசாரிக்கட்சிகள் தோற்றம் பெற வழி வகுத்தது. இதற்கு முக்கிய காரணம் இரண்டாம் உலகப் போர் ஆரம்பமானதையடுத்து ரொஸ்கிசவாதிகளுக்கும் மூன்றாம் அகிலத்தை ஆதரித்தவர்களுக்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டமையாகும்.

**லங்கா சமசமாஜக்கட்சி (LSSP)**

1935 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. அதன் முதலாவது தலைவராக கொல்வின் ஆர்.டி.சில்வாவும், விவியன் குணசேகரா செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஏகாதிபத்திய எதிர்ப்பையும், நாட்டின் விடுதலையையும் சாதாரண மக்களிடம் அனுதாபத்தையும் கொண்ட அனைவரும் இக்கட்சியில் இணைந்தனர். இலங்கையின் தேசிய இயக்கத்திற்கு தீவிரத்தன்மை வாய்ந்த உறுதிமிக்க தேசிய இயக்கமொன்று இல்லாத சூழ்நிலையில் இப்புதிய கட்சியானது அத்தேவையை நிறைவு செய்யக்கூடியதாக இருக்குமென்ற பலமான எதிர்பார்ப்பில் பலதரப்பட்ட கட்சிளும் இணைய முன்வந்தன. இதனால் தேசியவாதிகள்,

சீர்திருத்தவாதிகள், சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் மற்றும் முற்போக்கு சிந்தனை கொண்ட பலரும் இக்கட்சியின்பால் ஈர்க்கப்பட்டனர். அதனால் மாக்கிசத்தை மிக ஆர்வத்துடன் கற்றவர்களும், அதற்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டுமென உள்ளார்ந்த ரீதியில் விரும்பியவர் களும் அக்கட்சியின் தலைமைக் குழுவில் அதிகளவு இடம்பெற்றனர். இச்சமசமாஜ இயக்கமானது மாக்சிச அடிப்படையில் வளர்ந்து செல்லுமொன்றாகத் தன்னை வெளிப்படுத்தி வருகின்றது. இக்கட்சி தனது 22 அம்சங்கள் கொண்ட வேலைத்திட்டமொன்றினை முன்வைத்தது. இதனை அக்கட்சி முன்வைப்பதற்கு 1929-31 கால கட்டத்திலிடம்பெற்ற உலகப் பொருளாதார நெருக்கடிகளின் தாக்கத்தினால் இலங்கை அனுபவித்துக்கொண்ட மோசமான பொருளாதார நிகழ்வுப் போக்குகளை இனிமேலும் தவிர்த்துக்கொள்வதற்காகும்.

சமசமாஜக்கட்சியின் முதலாவது வேலைத்திட்டம் பரந்த அம்சங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது. தேசிய சுதந்திரத்தை வென்றெடுத்தல், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்றுதல், வர்க்கம், சாதி, இனம், பால், மதம் போன்றவற்றின் அடிப்படையிலான ஒழுங்கு முறைகளை ஒழித்தல், உற்பத்திச் சாதனங்களைத் தேசிய உடைமையாக்குதல், பங்கீடு, பரிவர்த்தனையில் சமத்துவத்தை ஏற்படுத்தல் போன்றவற்றுடன் ஏனைய பல அம்சங்களில் மக்கள் மீது சுமத்தப்பட்டிருந்த சுமைகளை அகற்றுவதற்கும் அல்லது குறைப்பதற்குமான சட்டவாக்கங்களையும் நடைமுறைகளையும் கொண்டுவருவதற்கான விடயங்கள் மேற்படி வேலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.

இளம் சமசமாஜக் கட்சியானது சட்ட சபைக்கு உள்ளேயும் வெளியேயும் தீவிரமாக இயக்கங்களை முன்னெடுத்து மக்கள் மத்தியில் அதிக பிரச்சாரங்களை மேற்கொண்டது. இனம், பால், மதம், சாதி போன்ற குறுகிய போக்குகளுக்கப்பால் மக்கள் மத்தியில் தீவிரப் பிரச்சாரங்கள் முன் தள்ளப்பட்டதுன் முழுமையான தேச சுதந்திரம் என்பதே உயர்த்திப் பிடிக்கப்பட்டது.1938 இல் விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டு வந்த நீர் வரியை நீக்கும் தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டதே இவர்களுக்கு சட்டசபையில் கிடைத்த முதல் வெற்றியாகும். அத்துடன் தோட்டத்தொழிற்றுறைக்கு இந்தியத் தொழிலாளர்கள் மேலும் மேலும் அழைத்து வரப்படுவதையும் வன்மையாக எதிர்த்தனர்.

இவ்வாறு 1935-39 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இளம் சமசமாஜக் கட்சியானது பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சிக்கெதிராகவும் அவர்களது பாதம் தங்களை சிங்கள- தமிழ் உயர்வர்க்கத்தினருக்கெதிரான நிலைப்பாட்டிலும் விட்டுக்கொடுக்காது பல முனைகளிலும் போராடி வந்தமை நோக்குதலுக்குரியதாகும். இத்தகைய வளர்ச்சியின் உச்சநிலையில் சமசமாஜக் கட்சி தமது பார்வையைப் பெருந்தோட்டத் துறையின் பக்கம் திருப்பலாயிற்று. தோட்டத்தொழிலாளர்களை அணிதிரட்டக் கூடிய தொழிற்சங்க நடவடிக்கைகளையும் வேகமாக முன்னெடுத்து வந்தது.

இவ்வாறு இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியாக ஆரம்பித்த லங்கா சமசமாஜக் கட்சியானது அன்றைய சூழலில் இலங்கையிலிருந்த தேசிய இயக்கம் உள்ளிட்ட அரசியல் சமூக அமைப்பின் அடிப்படையான புரட்சிகரமான மாற்றங்களைக் கோரி நிற்கும் மாக்சிச லெனினிசக் கொள்கை எதனையும் தத்துவத்தாலும் நடைமுறையாலும் கொடுக்கவில்லை யாயினும் லெனின் முன்வைத்தது போன்று **"ஒரு புரட்சிகர தத்துவம் இல்லாவிடில் புரட்சிகர இயக்கம் ஒன்று இருக்கமுடியாதென்பதை"** இம்முதலாவது இடதுசாரிக் கட்சியின் கொள்கையிலும் நடைமுறையிலும் காணமுடிந்தது.

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி**

1942 இல் தடைசெய்யப்பட்ட ஐக்கிய சோசலிசக் கட்சியின் உறுப்பினர்கள் ஒன்று கூடி 1943 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் 3 ஆம் திகதிகளில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்றுவித்தனர். இக்கட்சியின் தோற்றம் சட்ட விரோத சூழலில் இரகசியமான தொன்றாகவே உருவாக்கப்பட்டது. 1944 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இக்கட்சியின் முதலாவது தேசிய மாநாடு இடம்பெற்றது. இம்மாநாடு மாக்சிச, லெனினிசத்தின் அடிப்படையான ஒரு தொழிலாளர் வர்க்கக் கட்சிக்கான அமைப்பு விதிகளையும், ஜனநாயக முக்கியத்துவ முடைய கட்சியமைப்பு முறையையும் பிரகடனப்படுத்திக்கொண்டது. தனது உடனடிப் பணி இலங்கையிலிருந்து பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை வெளியேற்றி தேசிய சுதந்திரத்தை வென்றெடுப்பதென்றும், சர்வதேச ரீதியாகப் பாசிசத்தின் தோல்விக்காகவும், அதனை முற்றாக அழித்தொழிக்கும் சோவியத்யூனியனின் உலக மக்களினதும் உன்னதமான போராட்டத்துடன் கைகோர்த்துச் செல்வதையும் உறுதிப்படுத்தி நின்றது.

இக்கட்சி சிங்கள, தமிழ் தொழிலாளர்கள் மத்தியில் குறிப்பாக கொழும்பு நகரில் வேலை செய்து வந்த மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் உறுதியும் தீவிரமுமிக்க கட்சி உறுப்பினர்களும் ஊழியர்களும் முன்னணியில் நின்று கட்சித் தொழிற்சங்கப் பணிகளை முன்னெடுத்துச் சென்றனர். இருந்தபோதிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனது ஆரம்பம் முதல் ஒரு புரட்சிகரக்கட்சியாகத் தம்மை அமைத்துக் கொள்வதற்கு தவறியதொரு அமைப்பாகவே அடையாளப்படுத்த வேண்டியுள்ளது. இக்கட்சி ஒரு தேசபக்திக் கட்சியாகவே இருந்து செயற்பட்டது. அது இலங்கையில் ஏகாதிபத்திய விடுதலை முற்போக்கு இயக்கத்தின் பிரிக்கப்பட முடியாத ஒரு பகுதியாகும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனது வாழ்நாளில் இலங்கை மக்களுக்குப் பல வழிகளில் சேவை செய்ததுடன் அவர்களது விடுதலைக்கும் அத்தியாவசிய நலன்களுக்குமாக சளைக்காமல் போராடி வந்துள்ளது.

**சுதந்திர இலங்கையின் இடதுசாரிக் கட்சிகள்**

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் இலங்கையின் அரசியல் சூழ்நிலை பெருமளவு மாற்றம் கண்டது. இம்மாற்றமானது பொது அரசியல் திட்டமொன்றினை உருவாக்கிக் கொள்ள முடியாத கையறு நிலையினையே ஏற்படுத்தியது. அத்துடன் 1947 ஆம் ஆண்டு டி.எஸ்.சேனநாயகாவின் தலைமையில் உருவாகிய ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் கட்சியரசியல் வரலாற்றில் பெரியதொரு மாற்றத்திற்கான ஆரம்பத்தையும் ஏற்படுத்தியது. இக்கட்சியானது அடிப்படையில் ஏகாதிபத்தியத்திற்கு முற்றிலும் அடிபணிந்து நின்று அதற்குச் சேவை செய்யக்கூடிய தரகு முதலாளித்துவ வர்க்கத்தைப் பிரதிபலிக்குமொன்றாகவே காணப்பட்டது.

1947இல் இரண்டாவது சட்டசபை கலைக்கப்பட்டு சோல்பரி அரசியல் திட்டத்திற்கு அமைவாக பிரித்தானிய முறை சார்ந்த முதலாளித்துவப் பாராளுமன்றத்துக்கான முதலாவது தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள், வலதுசாரிக்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை ஒருமித்து எதிர்த்து நின்றன. தேர்தல் முடிவானது லங்கா சமசமாஜக் கட்சியை பிரதான எதிர்க்கட்சியாகப் பெருமையுடன் அமர்த்திய அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிபீடமேற்றியது.

முதலாளித்துவ சார்புவாதியான டி.எஸ்.சேனநாயகா அவர்கள் பதவிக்கு வந்த குறுகிய காலத்தில் தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் தமது இரும்புக் கரத்தாலும் அரசு இயந்திரங்களாலும் நசுக்க முற்பட்டார். வேலை நிறுத்தங்கள் சட்ட விரோதமானவை என்ற சட்டத்திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதுடன் முதலாளிகள் நிறுவனங்களுக்கு முழுப்பாதுகாப்பும் ஆதரவும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. அது மட்டுமன்றி அரச சார்பு வெகுசனத்தொடர்பு சாதனங்களில் இடதுசாரிகளுக்கெதிரான அபாண்டமான பொய்ப் பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய சூழலிலேயே பிரதமர் டி.எஸ்.சேனநாயகா (1952) திடீர் மரணமடைந்தார்.

சேனநாயக்காவின் மரணத்தின் பின் இவரது மகன் டட்லி சேனநாயகா பொதுத் தேர்தலில் பிரதம மந்திரியானார். அச்சந்தர்ப்பத்தில் பண்டாரநாயகா எதிர்க்கட்சித் தலைவரானார். ஆட்சிப் பீடமேறிய டட்லி அவர்களும் தந்தையின் பாதையிலேயே செல்லலானார். அக்காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் மிகப் பின்தங்கிய நிலைக்குச் சென்றதுடன் மக்கள் வறுமையின் மிகப் பரிதாபகரமான சுமைகளை ஏற்கவேண்டியிருந்தது. மக்கள் மீது அரசின் சுமைகள் வெகுவாக அதிகரித்தது. இத்தகைய செயல்கள் நேரடியாக உழைக்கும் அனைத்துப் பிரிவு மக்களையும் கடுமையாகப் பாதித்தது. இதனால் இடதுசாரிகள், மக்களுக்கெதிரான இக்கொடுமைகளை அம்பலமாக்க வெகுண்டெழுந்தனர். அக்காலத்தில் பலம் வாய்ந்த இடதுசாரிக்

SOUTH EASTERN UNIVERSITY LIBRARY

கட்சிகள் மூன்றும் ஒன்றிணைந்து அவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அன்று ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கும், பூரண ஹர்த்தால் ஒன்றினையும் நடாத்த அறைகூவல் விடுத்தன. இதற்கு அனைத்து உழைக்கும் மக்களும் பூரண ஆதரவளித்து அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குத் தள்ளின.

1956 இல் பண்டாரநாயகா பிரதமராகி ஆட்சிபீடமேறினார். இவரது கொள்கைகளில் பல இடதுசாரிகளுக்கு ஒத்துப்போனதால் அக்கட்சியினர் பண்டாரநாயகாவை ஆதரித்தனர். மேலும் பண்டாரநாயகாவின் திடீர் மரணத்தின் பின் இடதுசாரிகள் பலர் ஸ்ரீமாவுடன் இணைந்து செயற்பட்டனர். இதில் சமசமாஜக் கட்சி 12 இடங்களையும் ஐக்கிய முன்னணி 5 இடங்களையும் கம்யூனிஸ்ட் கட்சி 3 இடங்களையும் பெற்றுக்கொண்டன. திருமதி பண்டாரநாயகாவின் ஆட்சி தேசிய முதலாளித்துவ வர்க்க இயல்பை நன்கு வெளிப்படுத்தியதாகக் காணப்பட்டதால் இடதுசாரிகளனைவரும் ஒன்றிணைந்து ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக 21 அம்சக் கோரிக்கையை முன்வைத்து 1964 மார்ச்சில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டமொன்றையும் கூட்டத்தினையும் நடாத்தி தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமையைப் பறைசாற்றினர். இதன் விளைவாக ஸ்ரீமாவோ பண்டாரநாயகா இடதுசாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்ததுடன் ஒரு கூட்டரசாங்கத்தையும் அதில் இடதுசாரிகள் சார்பாக மூன்று மந்திரிப்பதவிகளையும் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இக்காலப்பகுதியில் (1965) இடதுசாரித் தலைவர்கள் பலர் இனவாதத்திற்குள் இறங்கிய பல சம்பவங்கள் இடம்பெற்றதையும் மறுக்கமுடியாது. 1970 மேயில் பதவிக்கு வந்த திருமதி பண்டாரநாயகா தலைமையில் ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் சமசமாஜக் கட்சி மூன்று முழு அமைச்சுக்களையும் இரண்டு உதவி அமைச்சுகளையும் பெற்றுக் கொண்டது. என்றாலும் 1970-77 கால கட்ட ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது இவ்விடதுசாரிகளால் சோசலிசத்தை வென்றெடுக்க முடியவில்லை. ஜனநாயகத்தை நிலைநாட்டவும் முடியவில்லை. ஐக்கியத்தை நிலைநாட்ட இயலவுமில்லை. அத்துடன் சோல்பரி அரசியல் யாப்புக்குப் பதிலாக மற்றொரு புதிய அரசியல் யாப்பினை இவ் ஐக்கிய முன்னணி அரசு தயாரித்துக்கொண்டது. அதனை உருவாக்கும் பொறுப்பு ட்ரொகிசவாதியும் சட்டவல்லுனருமான கொல்வின் ஆர்.டி.சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதே அரசியல்யாப்பு தமிழ்பேசும் மக்களுக்கு இன அடிப்படையில் பாதகமான அம்சங்களைக் கொண்டிருந்தது. அதற்குப் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் தமது முழு ஆதரவைத் தெரிவித்தமை இடதுசாரி இயக்க வரலாற்றில் இலகுவில் அழிக்கமுடியாத கறையாகப் பிடித்துக்கொண்டதுடன் அவர்கள் தமது பாதையிலிருந்து தடம் புரண்டு செல்லுகின்றார்கள் என்பதையும் எடுத்துக்காட்டியது.

இக்காலப்பகுதியில் இடதுசாரிக் கட்சித் தலைவர்களுட்பட செல்வந்தர்கள், சகல சுகபோகங்களையும் அனுபவித்து நிற்க தொழிலாளர்களும் விவசாயிகளும் சாதாரண மக்களும்

கடுமையான சுமைகளை சுமக்க நேரிட்டது. நாளாந்த வாழ்க்கைச் செலவும் வேலையின்மையும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே சென்றது. இவற்றையெல்லாம் அனுபவித்த மக்கள் **"இதுதான் சோசலிசம் என்றால் அது எமக்கு வேண்டாம்"** என்ற முடிவுக்கு வர நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். அத்துடன் ஐக்கிய முன்னணி அரசு இறுதி ஆண்டுகளில் பல்வேறு நிலைகளிலும் தமது செல்வாக்கினை இழந்து நிற்கவேண்டி ஏற்பட்டது. இது மட்டுமல்லாது இவ்வரசில் பங்கு கொண்ட ட்ரொட்கிசவாதிகளான சமசமாஜிகள் இறுதியாண்டுகளில் அரசாங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டதுடன் கம்யூனிஸ்டுகளும் அரசாங்கத்தில் பங்கு கொள்ளும் தமது நிலைப் பாட்டை மாற்றியமைத்தனர்.

**1977 இன் பின் இடதுசாரிகள் (ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் கீழ்)**

1977 ஜூலையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று பெருவெற்றியீட்டியது. இதில் எதிர்க்கட்சித் தலைவராக அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அமர்ந்தார். இத்தேர்தலில் இடதுசாரிகளுக்கு ஒரு பரிதாபநிலை காணப்பட்டது. அதுவே தனியொரு தொகுதியாயினும் இடதுசாரிகள் சார்பாக பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படாமையாகும்.

இக்காலப் பகுதியில் இடதுசாரிக் கட்சியான ஜே.வி.பி யின் எழுச்சியும் வீழ்ச்சியும் இடம் பெற்றன. 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வரை ஜே.வி.பி யை ஐக்கிய தேசியக் கட்சி தமது நலன்களுக்காக நன்கு பயன்படுத்திக்கொண்டது. 1983ஆம் ஆண்டில் இக்கட்சி தடைசெய்யப்பட்டதுடன் இவ்வியக்கம் ஆயுதம் தாங்கிய பாதைக்கு திரும்பி பல அழிவுகளை ஏற்படுத்தி இளைஞர் அமைதியின்மைக்கும் வழிவகுத்தது.

புரட்சிகர சக்தியாக முன்னேறிச் செல்லவேண்டிய மாக்சிச சக்திகள் தம்முள் பிளவுபட்டு இக்காலப் பகுதியில் பலமிழந்து சென்றனர். இதன் பின் இவர்கள் மீண்டும் மீண்டும் பாராளுமன்ற சேற்றில் புதைந்து தமது போக்கினையே மாற்றலாயினர். காலத்துக்குக் காலம் ஒரு கூட்டணியை அமைத்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதே இவர்களது நோக்கமாக மாறியுள்ளது.

**பொதுஜன ஐக்கிய முன்னணியும் இடதுசாரிகளும்.(1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்)**

1992 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் பொது ஐக்கிய முன்னணியை உருவாக்குவதில் திருமதி பண்டாரநாயக்க அதிக கவனம் செலுத்தினார். இதற்கு தனது மகன் அனுரா பண்டாரநாயக்க மூலம் உருவாகிய எதிர்ப்பையும் நிராகரித்துவிட்டு முன்னணியை இடதுசாரிகளுடன் இணைந்து ஏற்படுத்தினர். லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, வை.பி.டி.சில்வா தலைமையிலான ஸ்ரீலங்கா மக்கள் கட்சி மற்றும் நிஹால் பெரேரா வையும் இணைத்து பொதுஜன ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது . இவ்விடதுசாரிகள்

மாக்கிசத்தை வெவ்வேறு நிலைகளில் ஏற்றுக்கொண்டவையாகும் என்பதையும் மனதிற் கொள்வோம்

இன்றைய அரசாங்கத்தின் (1994 - பொதுத்தேர்தல்) இந்நான்கு இடதுசாரிகளின் மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 க்கும் உட்பட்டதேயாகும். சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றிற்கு தலா ஒவ்வொரு அமைச்சர் பதவியும் ஒவ்வொரு பிரதி அமைச்சர் பதவியும் கிடைத்துள்ளது. இடது சாரிகள் என்போர் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதிலும் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலும் ஜனநாயக மனித உரிமைகளைப் பாதுகாத்து முன்னெடுப்பதிலும் தேசிய இனங்களின் உரிமைகளை வலியுறுத்தி நிற்பதிலும் ஏனையவர்களை விட முன்னணியில் நிற்கவேண்டியவர்கள். ஆனால் இன்று தமது சொந்த நிலைப்பாட்டை இழந்து பாராளுமன்றத்தில் காணப்படுகின்றார்கள்.

இவ்விடதுசாரிகள் பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் அங்கம் வகித்த போதிலும் அவர்களது கொள்கை அடிப்படையிலான செல்வாக்கு மிகத் தாழ்ந்த நிலையிலேயே இருந்து வருகின்றமை அவதானிக்கக்கூடியதாகும். அதாவது இன்றைய பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் அங்கத்துவம் பெற்றுள்ள இடதுசாரிகள் எவ்வித சலசலப்பும் அற்றவர்களாக யாவற்றிலும் தலையாட்டுபவர்களாக இருந்து வருகின்றார்கள் என்ற கணிப்பே மேலோங்கி காணப்படுகிறது.

**முடிவுரை**

தேசிய இனங்கள் பற்றிய பிரச்சினையில் இவ்விடதுசாரிகளின் நிலை பழைய வரட்டுப்பாதையில்தான் காணப்படுகின்றது. சுயநிர்ணய உரிமை என்ற சொற்றொடரினை உச்சரிப்பதே மகாபாவம் என்று கருதுகின்றார்கள். இலங்கையில் தற்போதைய யதார்த்த தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத எந்தவொரு இடதுசாரிக் கட்சியும் நேர்மையாக மாக்சிசவாத இடதுசாரிக்கட்சியெனக் கொள்ளமுடியாது. மேற்குறித்த அளவுகோலின் ஊடே பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் பெறும் இடதுசாரிக்கட்சி எதுவும் இத்தகைய நிலைப்பட்டினைக் கொண்டிருக்கவில்லை. இடதுசாரி அணியில் புதிய ஜனநாயகக்கட்சியும் நவசமாஜக்கட்சியும் மட்டுமே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகளை தத்தம் நிலைப்பாட்டிற்கமைய உறுதியாகப் பற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேல் வளர்ந்து வந்த தேசிய இனப்பிரச்சினையை குறிப்பாக 17 வருடகால ஐக்கிய தேசியக் கட்சியின் பேரினவாத இராணுவ ஒழுக்குமுறை தமிழ் பேசும் மக்களின் உயிருடைமை இருப்பிடத்தை பாரிய அழிவுகளுக்கு உள்ளாக்கிய நிலையினைச் சரியான நோக்கில் பார்க்கவேண்டும். இன்றைய கேள்வி யாதெனில் இராணுவ ஒடுக்கு முறைக்கு ஒத்துழைப்பதா அன்றி ஒடுக்கு முறையை எதிர்த்து நிற்கும் மக்களின் பக்கத்தில் உறுதியாக இருப்பதா என்பதாகும். இதில் ஒரு மாக்சிச லெனினிசவாதி அல்லது குறைந்த பட்ச முற்போக்கு

இடதுசாரி நிச்சயம் மக்களின் பக்கத்திலேயே தன்னை நிறுத்திக்கொள்வான் என்பதே இங்கு உரத்துச்சொல்ல வேண்டிய விடயமாகும்.

"மாற்றம் என்பது முன்னேற்றம்"

**உசாத்துணை நூல்கள்**


01. Woodward C.A. (1967) The growth of a party system in Ceylon (Providence: Brown University Press)

02. Wilson A.J. (1979)Politics in SriLanka 1947 - 1973

03. Wiswawarnpala W.A. Ethnic strife and Politics in Sri Lanka: An investigation into demands and respones.

04. Indraratna A.D.V. Fifty years of Sri Lanka's independence A Socio Economic review - 1999

05. Amarasighe Y.R. (1998) Revolutionary idealism and parlimentary politics - A Study of Tro + Tskyism in Sri Lanka.

06. குமாரி ஜெயவர்த்தனா (1979) இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் தோற்றம்.